ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1861/44 - 2014 මැයි 09 වැනි සිකුරාදා - 2014.05.09

*1861/44 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக்குறிப்பு - திருத்தம் இல. 01

2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 1631/20 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதும் 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளதுமான இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் பிரமாணக் குறிப்பினை பின்வரும் விதத்தில் திருத்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

(i) உப்பிரிவு 8.1.1 (ஆ) ஆனது பின்வரும் விதத்தில் இத்தால் திருத்தப்படுகின்றது.

8.1.1 (ஆ) வயதானது விண்ணப்ப முடிவுத்திகதியிலுள்ளவாறு 18 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) உப்பிரிவு 8.1.1 (ஊ) ஆனது இத்தால் நீக்கப்படுவதுடன் மேற்படி உப்பிரிவுக்கு பதிலீடாக பின்வரும் உப்பிரிவானது இத்தால் உள்ளடக்கப்படுகின்றது.

உப்பிரிவு 8.1.1 (ஊ) தொழில் தகைமை:-

தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமையின் (NVQ) ஆகக்குறைந்தது 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் கணினி/தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் கற்கைநெறி ஒன்றினைத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7.
2014, மே 08.

05-761



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.